# FIRST INFORMATION REPORT
## முதல் தகவல் அறிக்கை
(Under Section 154 Cr.P.C.)
(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8066041

1. District : மாவட்டம் கடலூர் | PS: காவல்நிலையம் ஊ.த.க. பிரிவு | Year: ஆண்டு 2019 | FIR No.: மு.த.அ. எண் 3/2019 | Date: நாள் 21.02.2019

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act 1988 — Sections பிரிவுகள்: 7
(ii) Act சட்டம்: as amended by The Prevention of — Sections பிரிவுகள்:
(iii) Act சட்டம்: Corruption (Amendment) Act 2018 — Sections பிரிவுகள்:
(iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் — Date from நாள் முதல் 20.02.2019 11.00 hrs — Date to : நாள் வரை
Time Period : நேர அளவு — Time from : நேரம் முதல் — Time to : நேரம் வரை
(b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 21.02.2019 — Time : நேரம் 0830 hrs
(c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol - I — Time : நேரம் 0830 hrs

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக கணினி தட்டச்சு

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும் சுமார் 65 கி.மீ. தென்மேற்கு
Beat Number : முறைக் காவல் எண் — (b) Address : முகவரி கம்மாபுரம்
(c) In case outside limit of this Police Station, then the Name of P.S : இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் -- District : மாவட்டம் --

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் N. செந்தில் — (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் R. நாராயணசாமி
(c) Date / Year of Birth நாள் / பிறந்த ஆண்டு 34 வயது — (d) Nationality : நாட்டினம் இந்தியன் — (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
Date of Issue : வழங்கப்பட்ட நாள் — Place of Issue : வழங்கப்பட்ட இடம்
(f) Occupation : தொழில் விவசாயம் — (g) Address : முகவரி நெ.313, தெற்கு தெரு, அகர ஆலம்பாடி கிராமம், புவனகிரி தாலுக்கா, கடலூர் மாவட்டம்.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
தெரிந்த / ஐயப்பாட்டிற்குறிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)

ஆனந்த், வி.ஏ.ஓ., ஓட்டிமேடு கிராமம்.

8. Reasons for delay in reporting by the complainant / Informant:
குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்

----

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

— இல்லை —

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு — இல்லை —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் — இல்லை —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது

**இன்று 21.02.2019 ஆம் தேதி காலை 08.30 மணிக்கு காவல் ஆய்வாளர் D.சண்முகம் ஆகிய நான், கடலூர் ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புப் பிரிவு அலுவலகத்தில் பணியில் இருந்தபோது, அலுவலகத்திற்கு வந்த கடலூர் மாவட்டம் புவனகிரி தாலுக்கா, ஆகர ஆலம்பாடி கிராமம், தெற்கு தெரு, எண்.313, நாராயணசாமி மகன் செந்தில் என்பவர், என்னிடம் கொடுத்த கணினி தட்டச்சு புகார் மனுவின் விவரம் பின்வருமாறு : அனுப்புநர், N.செந்தில், வயது 34, த/பெ,R.நாராயணசாமி, எண்.313, தெற்கு தெரு, அகர ஆலம்பாடி கிராமம், புவனகிரி தாலுகா, கடலூர் மாவட்டம். பெறுநர், லஞ்ச ஒழிப்பு இன்ஸ்பெக்டர்,**

**(தொடர்ச்சி பக்கம் -3)**

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ..................... Rank ..................... to take up the Investigation / Refused Investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
மு.த.அ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

N. Senthil

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் /
பெருவிரல் இரேகைப் பதிவு

Signature of the Officer in charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்

21.02.19 10.20 மணி

Name: பெயர் ..........D. சண்முகம்
Rank: நிலை ....................No. எண் .........
காவல் ஆய்வாளர்
21.2.19 ...

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)p.2

லஞ்ச ஒழிப்பு பிரிவு, கடலூர் மாவட்டம். அய்யா, நான் தற்சமயம் அகர ஆலம்பாடி கிராமத்தில் வசிக்கிறேன். நான் விவசாய வேலை செய்து வருகிறேன். எனக்கு திருமணமாகி விட்டது. நான் பத்தாம் வகுப்பு படித்து பாஸ் செய்துள்ளேன். எங்க அப்பா நாராயணசாமிக்கு சொந்தமாக 4 ஏக்கர் நிலம் ஓட்டிமேடு கிராமத்தில் உள்ளது. அந்த நிலத்தினை சுமார் 2 வருடங்களுக்கு முன்னர் என் அப்பா தலா ஒரு ஏக்கர் நிலம் வீதம் எனக்கும், என் அண்ணன்கள் ரவி, சேகர் மற்றும் என் அம்மா முத்தம்மாள் ஆகியோர்களுக்கு சேத்தியாத்தோப்பு ரிஜிஸ்டர் ஆபீசில் பாக பிரிவினை பத்திரம் எழுதி வைத்தார். தற்போது நாங்கள் அந்த சொத்திற்கான பட்டாவினை எங்கள் பெயருக்கு தனித்தனியாக மாற்றிக்கொள்ள முடிவு செய்தோம். எனது அண்ணன்கள் ரவி, சேகர் மற்றும் எனது அம்மா முத்தம்மாள்ஆகியோர் என்னிடம் அவர்களது பட்டா மாற்றம் வேலையையும் சேர்த்து பார்க்க சொன்னார்கள். செலவுக்குண்டான தொகையையும் அவர்கள் என்னிடம் தனித்தனியாக கொடுத்தார்கள். நான் கடந்த 15.02.2019 அன்று பேங்கில் தனித்தனியாக நாலு பேருக்கும் பணம் கட்டி, பட்டா வேண்டி கடந்த 19.02.2019 அன்று ஆன்லைனில் விண்ணப்பித்துள்ளேன். அந்த நிலம் அமைந்துள்ள பகுதிக்கான விஏஓ ஆபீஸ் ஓட்டிமேடு கிராமத்தில் உள்ளது. நான் அங்கு சென்று பார்த்தபோது அந்த ஊருக்கான விஏஓ ஆனந்த் என்பவர் அருகில் உள்ள கம்மாபுரம் கிராமத்தை சேர்ந்தவர் என்றும் அவரை அவரது வீட்டில்தான் போய் பார்க்க வேண்டும் என்றும் கேள்விப்பட்டு நான் 20.02.2019 ந்தேதி காலை சுமார் 11.00 மணிக்கு என்னிடம் உள்ள நிலம் சம்மந்தமான ஆவணங்களை எடுத்துக்கொண்டு அவரை கம்மாபுரத்தில் உள்ள அவரது வீட்டிற்கு போய் பார்த்தேன். அப்போது விஏஓ ஆனந்த் என்னிடம் உள்ள நிலம் சம்மந்தமான ஆவணங்களை சரிபார்த்த பின்னர் என்னிடம் அவர் உங்க நாலு பேருக்கும் பட்டா பெயர் மாத்தனும்னா மொத்தம் ரூ.35,000/– செலவாகும் என்று சொன்னார். அதற்கு நான் இந்த பணம் ரொம்ப அதிகமாயிருக்கு, விவசாயமும் லாபகரமாக இல்லை என்று சொன்னேன். அதற்கு அவர் முதல் தவணையாக ரூ.5,000/–த்தை லஞ்சமாக இன்று 21.02.2019 ந்தேதி விருத்தாசலம் தாலுகா ஆபீசில் நேரில் வந்து பார்த்து கொடுக்க சொன்னார். மீதம் ரூ.30,000/– பணத்தை தான் சொல்லும்போது எடுத்து வந்து கொடுக்க வேண்டும் என்று என்னிடம் சொன்னார். சொன்னபடி பணம்

கொடுத்தால்தான் பட்டா பெயர் மாற்றம் செய்ய முடியும் என உறுதியாக சொன்னார். நான் இது சம்மந்தமாக எனது அண்ணன்கள் மற்றும் அம்மாவிடம் கலந்து பேசினேன். அதற்கு அவர்கள் லஞ்சம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய விருப்பமில்லை என்று சொன்னார்கள். பிறகு நாங்கள் யோசித்து பார்த்ததில் விஏஓ ஆனந்துக்கு லஞ்சமாக ரூ.35,000/– பணம் கொடுத்து பட்டா பெயர் மாற்றம் செய்ய விருப்பமில்லாத காரணத்தால் விஏஓ ஆனந்த் மீது நடவடிக்கை எடுக்க சொல்லி இப்புகார் மனுவை அளிக்கிறேன். விஏஓ ஆனந்த் கேட்ட லஞ்சப்பணம் முதல் தவணை ரூ.5,000/–த்தை கொண்டு வந்துள்ளேன். எனது சகோதரர்கள் இருவர் மற்றும் எனது அம்மா உடன் நான் ஆகியோர் சேர்ந்து தலா ரூ.1,250/– வீதம் சேகரிக்கப்பட்டது என்பதை தெரிவித்துக்கொள்கிறேன். என்னிடம் லஞ்சம் கேட்ட விஏஓ ஆனந்த் மீது நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். இப்படிக்கு sd- N.Senthil, 21.02.2019. மேற்கண்ட வாதியின் புகார்மனுவை பெற்று புகாரின் உன்மை தன்மை பற்றி விசாரித்துக்கொண்டேன். பின்னர் பிடிக்கக்கூடிய குற்ற செயலாக இருந்ததால், புகாரின் மீது நிலைய குற்ற எண். U/s 7 Prevention of Corruption Act 1988, as amended by The Prevention of Corruption (Amendment) Act, 2018-ன் படி வழக்கு பதிவு செய்யப்பட்டது. மேற்படி வழக்கு இன்று காலை 09.30 மணிக்கு பதிவு செய்யப்பட்டது. இத்துடன் அசல் முதல் தகவல் அறிக்கை இணைத்து நீதிமன்ற நடவடிக்கைக்கு அனுப்பிவைக்கப்படுகிறது.

21.2.19

(தி. கிளிஸ்டல்)
காவல் ஆய்வாளர்,
ஊ.த.க.பிரிவு, கடலூர்.